[திரு. கோ. சி. மணி] [1990 ஆகஸ்ட் 23

''1990ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 38/1990) நிறைவேற்றப் பெற வேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஈ) மாவட்ட நகராட்சிகள் (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு 1990.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 39/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''.

திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சொத்துவரிக் கணக்குகளுக்கு சில நெறி முறைகளை—'கெய்டு லைன்ஸ்'—வரையறுத்து, கடந்த அரசு 1137 எண்ணுள்ள ஒரு ஆணையைப் பிறப்பித்தது. அந்த ஆணை செல்லத்தக்கதாக ஆக்குவதற்காகத்தான் இந்த சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இல்லையென்று சொன்னால், ஏற்கனவே சொத்து வரிகளை அதிகமாக போடப்பட்டிருக்கக்கூடிய அந்த நிலையில் பலபேர் நீதிமன்றங்களுக்குச் செல்ல முடியும். எனவேதான், அதற்கான ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருப்பதை நான் வரவேற்கிறேன். முந்தைய அரசு இதை மட்டும் செய்யவில்லை; நகராட்சிகளுக்கு இருந்த அதிகாரங்களையே பறித்தது. 5 ஆண்டுகள் என்று இருக்க வேண்டிய நகராட்சிகளின் காலத்தை 3 ஆண்டுகளாக குறைத்தது. 'அப்பீல் கமிட்டி' — வரி முறையீட்டுக் குழு இதில் நகராட்சித் தலைவர்களையே நீக்கிவிட்டு, 'ஆர்.டி.ஓ.'-க்களைப் போட்டது. வரியைக் குறைப்பதற்குக் கூட, ஐந்து சதவிகிதத்திற்கு மேல் குறைக்கக் கூடாது என்பது போன்ற பல நிர்பந்தங்களையெல்லாம், திருத்தங்களையெல்லாம் கொண்டு வந்தது. இதற்கு அடிப்படையான காரணம், தேர்தல் நடந்து முடிந்தவுடனேயே உள்ளாட்சித் தேர்தல்கள் பெருவாரியான நகரமன்றங்களில், திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் எதிர்க்கட்சிகள் அதில் பெருவாரியாக வந்துவிட்டக்

* 20—8—1990 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

காரணத்தினால் இந்த அதிகாரப் பறிப்பைப் பூராவும் அவர்கள் செய்தார்கள் என்பதுதான் இதிலிருந்து தெரிகிறது. அது மட்டுமல்ல, நகராட்சி ஆசிரியர்களுடைய கோரிக்கையை நிறை வேற்றி விட்டதாகவும் அவர்கள் அரசு ஊழியர்கள் என்றும் கூறினார்கள். அவர்களது கோரிக்கையைப் பரிவுடன் கவனித்து, நிறைவேற்றி விட்டதாகவும், அவர்கள் அரசு ஊழியர்கள் என்றும் 1–6–1986–லிருந்து என்றும் சொல்லப்பட்டது. இதுவும் கூட அந்த நோக்கத்திற்காகத்தான். பெருவாரியான நகராட்சிகள் இப்படிப் பட்ட எதிர்க்கட்சிகளினுடைய பிடிப்பில் வந்துவிட்ட காரணத் தினால், ஆசிரியர்களை அங்கு விட்டுவைக்கக் கூடாது என்ற காரணத்திற்காகத்தான் செய்யப்பட்டிருக்கிறது என்று நாம் எண்ண வேண்டியிருக்கிறது. காரணம், இதுவலரயில் 'சர்வீஸ் ரூல்ஸ்' அவர்கள் காலத்தில் போடப்படவில்லை. அதுமட்டுமல்ல, 1—6—1986–லிருந்து அவர்கள் அரசு ஊழியர்கள் என்று அறிவிக்கப்பட்டாலும், இந்த அரசு வந்த பிறகுதான், அவர்களுக்கு அரசின் சார்பாக ஊதியமே கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்தச் சமயத்திலே எடுத்துக் காட்ட விரும்புகிறேன். எனவேதான் இப்படிப்பட்ட அதிகாரப் பறிப்புகளை எல்லாம் இந்த அரசு வந்தவுடனே மீட்டுத் தந்திருக்கிறது. அதே சமயத்தில் வேறு சில பிரச்சினைகளையும் நான் சொல்ல விரும்புகிறேன். இப்படிப் பட்ட திருத்தங்களை எல்லாம் கொண்டு வரும்போது சில முக்கிய மான குறிப்பிட்ட விஷயங்களை மாண்புமிகு அமைச்சர் அவர் களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

11-50 மணி

இன்னொரு உத்தரவு என்னவென்றால், நகராட்சிகளிலே பில் கலெக்டர்களாக அந்தந்தப் பகுதிகளிலே இருப்பவர்களைப் போடலாம்; ஆனால் எல்லா மாவட்ட ஆட்சியாளர்களுக்கும் அரசு அளித்த உத்தரவு என்ன இருக்கிறது என்று சொன்னால், ஏற்கெனவே ரெட்ரென்ச்மென்ட் செய்யப்பட்ட வி.ஏ.ஓ.க்களை அதாவது கிராம நலப் பணியாளர்களைத்தான், வேலையிலிருந்து விடுவிக்கப்பட்ட அவர்களைத்தான் போடவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் முனிசிபாலிட்டிக்கு இருக் கக்கூடிய அதிகாரம் இதன் மூலம் போனது மட்டுமல்ல; அந்தந்தப் பகுதிகளிலே இருக்கக்கூடிய பில் கலெக்டர்கள் என்று சொன்னால் இந்தப் பணிகளைச் சரியான முறையில் செய்ய முடியும். நெல்லிக் குப்பத்தில் ஒரு பில் கலெக்டர் போட வேண்டும் என்று சொன் னால், செஞ்சிக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய ஆளைப் போட் டால் வேலை நடைபெறாது. அந்த உத்தரவு இன்னும் நீடிக் கிறது. எனவே அதை அகற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எத் தனையோ இலாக்காக்கள் இருக்கின்றன. 40-க்கும் மேற்பட்ட

அரசு இலாக்காக்கள் இருக்கின்றன. எனவே உள்ளாட்சித் துறையில் மட்டும்தானா இதைச் செய்ய வேண்டும். ரெட்ரெனச்ட் வி.ஏ.ஓ.-க்களுக்கு வேறு எங்கெங்கோ வேலை கொடுப்பதற்கு, ஜூனியர் அசிஸ்டெண்ட்டாக வேலை கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதை நாம் செய்யலாம். அதுமட்டுமல்ல.

நகரங்கள் வளர்ந்து வருகின்றன. மக்கள் தொகை பெருகி வருகிறது. துப்புரவுத் தொழிலாளர்களை அதிகரிக்கவேண்டுமென்று மாணபுமிகு உறுப்பினர் தங்கராஜ் அவர்கள் கூறினார்கள். தெருவிளக்கு அதிகமாகப் போட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆனால் மின்சார வாரியம் என்ன செய்கிறது என்று சொன்னால், ஒரு கோட்டத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு 275 புது இணைப்புகள்தான் கொடுக்க முடியும் என்று அவர்கள் வரையறுத்து இருப்பதன் காரணமாக பல இடங்களில் நகராட்சிகளில் தெரு விளக்குகளைப் போட முடியாத சூழ்நிலை இருக்கிறது. அதனால் இருட்டாக இருக்கக்கூடிய நிலைமையும், கொலை, கொள்ளை, வழிப்பறி போன்ற இவை எல்லாம் நடைபெறக்கூடிய நிலைமை இருக்கிற காரணத்தால் மின்சார வாரியத்தோடு நகராட்சி அமைச்சர் கலந்து பேசி இதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. இன்னும் இங்கே நகராட்சிகளுக்கு மக்கள் நலப் பணியாளர்கள் போடப்படவில்லை. நான் என்ன கேட்டுக் கொள்ள விரும்புகிறேன் என்று சொன்னால் எப்படி ஏற்கெனவே முந்தைய அரசு ஒரு ஆணை பிறப்பித்து, அது சட்டத்தின் கீழ் நிற்குமா, நிற்காதா என்ற சூழ்நிலை வந்து அதைப் பாதுகாக்க வேண்டிய நிலையில் அரசு இன்றைக்கு சட்டத் திருத்தத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கிறதோ அப்படிப்பட்ட நிலைமையைத் தவிர்க்கின்ற வகையில் இந்த மக்கள் நலப் பணியாளர்களைப் போடும்போது சரியான விதிமுறைகளின் படி எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்ச் மூலமாக எடுத்து அந்த முறையில் அரசு செய்யவேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கூறி இந்தச் சட்டத் திருத்தத்தை நான் ஆதரித்து அமருகிறேன். நன்றி, வணக்கம்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை).

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் என்னால் முன்மொழியப்பட்டு இருக்கிற இந்தச் சட்டமுன்வடிவு, குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் 1970-71-ஆம் ஆண்டில் இருந்து 1985-86ஆம் ஆண்டு வரை வரி விதிப்புச் சட்டத்தைத் திருத்தாமல் அரசு ஆணை பிறப்பித்து வசூலிக்கப்பட்டு வந்ததில் அதிகமான தொகை இருக்கிறது என்பதால் அதைக் குறைக்க வேண்டுப்

1990 ஆகஸ்ட் 23] [திரு. கோ. சி. மணி]

என்பதற்காக பல கோரிக்கைகள் வந்து, பிறகு ஒரு அரசாணை பிறப்பித்து அதை ரத்து செய்த பிறகும் கோரிக்கைகள் வரப்பட்டு அது இன்று முதல் அந்த நிலை இல்லாமல் போக வேண்டும் என்பதை மாற்றி, உள்ளபடியே அரசின் சட்டத்தைத் திருத்தி அதை பின்னேற்புச் செய்து முறைப்படுத்திவிட்டு அதற்கு முன்னாலேயும், இந்த அரசு வந்ததற்குப் பிறகும் அப்படிப்பட்ட வரி செலுத்துவோர் கோரிக்கைகளை ஏற்று வரி விதிப்பில் இருக்கிற தாரதன்மைகளை எல்லாம் பரிசீலனை செய்வதற்கு நகராட்சியில் குழு அமைத்து, அந்த நகராட்சியினுடைய மேல் முறையீட்டு மன்றங்களுக்குள்ளேயே அதைப் பரிசீலிக்கலாம் என்பதற்கும், அதற்கு முன்னால் இருந்த தடைகளை 50 சதவீதம்தான் குறைக்கலாம்— திரு. சி. கோவிந்தராஜன் அவர்கள் குறிப்பிட்டது போல் 5 சதவீதம்தான் குறைக்கலாம் என்று—50 சதவீதத்தை உயர்த்திவிட்டு 5 சதவீதம் தான் குறைக்கலாம்என்று அறிவித்து அந்தக் குழுவிற்கு ஒரு அதிகாரம் கொடுத்தால் அந்த அதிகாரமே சரியான அதிகாரமாக இல்லை. நல்ல முறையில் குழு இயங்க முடியாது என்ற எண்ணத்திலதான் அதை ரத்து செய்து அவர்கள் உசிதப்படி எவ்வளவு குறைக்கவேண்டுமோ அவ்வளவு குறைக்கலாம் என்று அந்த உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. அங்கே ஏற்கெனவே போடப்பட்ட அந்த ஜி.ஓ.-க்களுக்கு பின்னேற்பைத் தான் இது தந்திருக்கிறது. அதையொட்டி நம்முடைய திரு. கோவிந்தராஜன் சில கருத்துக்களைச் சொன்னார்கள். மக்கள் நலப் பணியாளர்களைப் போடும்போது அதைப் பார்த்து சட்டத்திற்கு உட்பட்டுச் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அதை எல்லாம் பரிசீலித்துச் செய்யவேண்டும் என்று இந்த அரசு இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்து பில் கலெக்டர்களைப் பொறுத்தவரையில் அங்கே இருப்பவர்களை இங்கே கொண்டு வந்து போடுகிறார்கள். இங்கே இருப்பவர்களை அங்கே கொண்டு வந்து போடுகிறார்கள் என்றார்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

11-55 மணி

அதிலும் குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், ஏற்கெனவே இருந்த வீ.ஓ.-க்களை - பணியிலிருந்து நீக்கப்பட்டவர்களை— அவர்களுக்கு வாய்ப்பு வரும்போது பணிகள் தரலாம் என்ற அரசின் அறிவிப்பையொட்டி, சில நகராட்சி மன்றங்கள் இதைத் தருகிறார்கள். வேறு இலாக்காக்களில் வேலை இல்லையா என்று கேட்டார்கள். நம்முடைய இலாக்காவிலேயே தருவதைப் போல அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்று ஆங்காங்கு அந்த ஆணை போய் இருப்பதையும் நான் பார்த்திருக்கிறேன். ஆனால், பில் கலெக்டர் என்பது இப்போது நகராட்சிகளுக்கு அதிகமாகத் தேவையிருக்கவில்லை என்று நான் கருதுகிறேன். அதற்குக் காரணம், இப்போது வரிகளை வரித் தண்டலர்கள் வசூலிக்கிற முறை இரண்டு ஆண்டுகளாக நிறுத்தப்பட்

டிருக்கிறது. ஆங்காங்கு வங்கிகளுக்குச் சென்று அவர்களாகவே வரியைக் கட்டி, அதன் மூலம் ரசீதைப் பெறும் முறை வந்தது. இந்தத் துறையிலே நான் பொறுப்பேற்றதற்குப் பிறகு சில பிரச்சினைகள் வந்தன. அதை மாற்ற வேண்டும், திருத்த வேண்டுமென்றெல்லாம் கேட்டுக் கொண்டார்கள். அதைப் பரிசீலித்துச் செய்கிறோம் என்று நான் சொன்னேன். ஆனால் இந்த ஆண்டு ஐந்தாறு மாதங்களில், அந்தப் பணிகள் திருப்தி கரமாக இருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. குறிப்பாக இதற்கு முன்னால் வசூலித்ததை விட—வரித்தண்டலர்கள் வரி வசூலித்ததை விட—இப்போது வசூல் அதிகப்பட்டு இருக்கிறது என்றும், மக்களுக்கு சங்கடங்கள் குறைந்திருக்கின்றன என்றும் தெளிவாகத் தெரிகிறது. இனிமேல் அதைத் தொடர்ந்து பணியாளர்களை நியமிக்கிற நிலை எந்த நகராட்சிக்கும் வராது என்பதைக் கருத்தில் கொண்டு, அப்படி ஏதாவது வருமானால் அப்பகுதிகளில் இருக்கிறவர்கள் இருந்தால்தான் அதை ஏற்றுக் கொள்ளலாம் என்று ஆலோசனை வழங்கலாம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே ஒரே ஒரு பிரச்சினைக்காகத்தான் இந்தச்சட்ட முன் வடிவு இங்கே கொண்டுவரப்பட்டது. ஏற்கெனவே அரசு வழங்கிய ஆணைகளைப் பின்னேற்கச் செய்வதற்காகவும் இனிமேல் வரி முறைகள், வரி வசூலித்தல், வரி விதித்தல் இவைகளுக்கெல்லாம் இந்த அரசு ஒரு 'கைடுலைன்ஸ்' கொடுத்துவிட்டது என்பதைத் தெரிவித்து, இந்தத் திருத்தச் சட்டமுன்வடிவை ஏற்றுக் கொள்ளுமாறு விழைகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. அ. இராசேந்திரன்) : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 39/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

1990 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 39/1990) நிறைவேற்றப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

உணவு வழங்கு நிறுவனங்கள் திருத்த சட்டமுன்வடிவு 1990.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவு வழங்கு நிறுவனங்கள் (திருத்த) சட்டமுன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 41/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் What has been stated in the Statement of Objects and Reasons is, ''....based on the suggestions of the said Committee on Labour laws, it has been decided to amend the Tamil Nadu Catering Establishments Act.'' இந்தக் குழு யாருடைய தலைமையில் போடப்பட்டது? எப்போது கூட்டம் நடந்தது? அறிக்கை வந்ததா? அது இல்லாமல் எப்படி திருத்தம் செய்ய முடியும்? That is why, I sent a petition to the Hon. Speaker raising my objection for the introduction, in the Assembly, of a Bill to amend the Catering Establishments Act. We do not know the recommendations of this Committee on Labour legislation; we do not know when the Committee was constituted, when the report of the Committee was submitted to the Government, when the report of the Committee was placed on the table of the douse, etc. That is why I have stated that to bring in the amendment to the Catering Establishments Act, based on that Heport, is improper. Therefore, I have requested the Hon. reaker kindly not to permit the Bill to be taken up for consireration in the House at this stage and to direct the Government to table the Report first in the House,

*21—8—1990 அம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.